[திரு. பி. தங்கமணி] [*2018 ஜூலை 9*

அந்நிறுவனத்துடன் கலந்து பேசி, இதுபோன்று பிற நிறுவனங்கள் இழப்பீடு தருகின்றன, அதனால் நீங்களும் அதற்கு முன்வர வேண்டும் என்ற கோரிக்கை உங்கள் சார்பாகவும், விவசாயிகள் சார்பாகவும், அரசின் சார்பாகவும் அந்நிறுவனத்திற்கு வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து இராயக்கோட்டை வட்டம் உருவாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், "வேப்பனஹள்ளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து இராயக்கோட்டை வட்டம் உருவாக்க வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து அஞ்செட்டியை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் அமைத்திட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, மீண்டும் தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து இராயக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு உத்தேசிக்கப்படும் வட்டத்திற்கு

2018 ஜூலை 9] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள பரப்பு, வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் மக்கள்தொகை ஆகியவை பூர்த்தியாகாத காரணத்தினால், இராயக்கோட்டையினை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

முற்பகல் 11–40

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். எங்களுடைய இராயக்கோட்டை பகுதியானது மிகவும் பழமையான பகுதியாகும். திப்புசுல்தான் ஆண்ட காலத்திலேயே, அவரது ஆட்சியின் தலைமையிடமாக இராயக்கோட்டை இயங்கி வந்தது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் தேன்கனிக்கோட்டை வட்டத்திலேயிருந்து பிரித்து இராயக்கோட்டைக்கு புதிய தாலுகா அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேன்கனிக்கோட்டை வட்டமானது 78 ஊராட்சிகளைக் கொண்டதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், இன்று நேரமில்லை. நீங்கள் விளக்கமாகப் பேசுகிறீர்கள். இது மானியக் கோரிக்கைமீதான விவாதம் இல்லை. சுருக்கமாக ஒரு கேள்வியை கேளுங்கள். இல்லையென்றால் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை பதில் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடு) சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை வட்டம், மூன்று இலட்சத்து 80 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட வட்டமாகும். ஆகவே, இராயக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் உருவாக்கித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க, வருவாய்த் துறையினுடைய சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவாகக் கொண்டு செல்லவும், புதிய வட்டங்கள், கோட்டங்கள், மாவட்டங்கள் உருவாக்குவதற்கு, பரப்பளவு, வருவாய் கிராமங்கள், மக்கள்தொகை ஆகியவற்றின் அடிப்படையிலே அரசாணை வெளியிட்டிருக்கின்றோம். அந்த அடிப்டையிலே நிபந்தனைகள் பூர்த்தியாகும் பகுதிகள் எல்லாம் வட்டங்களாக உருவாக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேப்பனஹள்ளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டத்திலிருந்து பிரித்து இராயக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே, அந்த மாவட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று, தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து, அஞ்செட்டியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய தாலுகா ஏற்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இருந்தபோதிலும்கூட மாண்புமிகு உறுப்பினரின் அந்தக் கோரிக்கையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியின் வரலாற்றுச் சிறப்பினையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தப் பகுதியினுடைய முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, மாவட்ட நிருவாகத்தினுடைய கருத்துருவைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரிக்கு ஒரு தாலுகா அலுவலகம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது வழங்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக என்னுடைய தொகுதி மக்களின்

2018 ஜூலை 9] [திரு. பி. முருகன்]

சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து இராயக்கோட்டையை புது தாலுகாவாக அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் கவன ஈர்ப்பு கொடுத்தேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுக்காமல், கண்டிப்பாக தேன்கனிக்கோட்டை வட்டத்தைப் பிரித்து இராயக்கோட்டையை புதிய வட்டமாக உருவாக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நம்பினார் கெடுவதில்லை', இது நான்குமறை தீர்ப்பு. அம்மா அவர்களுடைய அரசை நம்பியவர்களுக்கெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே கேட்ட கோரிக்கை நிறைவேறியிருக்கிறது. இப்போது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் இராயக்கோட்டையை புது வட்டமாகப் பிரிக்க வேண்டுமென்று முக்கியத்துவம் கருதி கேட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதையும் நிச்சயம் கனிவோடு பரிசீலனை செய்வார்கள்.

எங்களின் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்கூட, 'இதில் முக்கியத்துவம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப கேட்கிறார்கள். எனவே உடனே கவனியுங்கள்' என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, நிச்சயமாக அம்மா அவர்களின் அரசு கனிவோடு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.